# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2202/16 - 2020 නොවැම්බර් මස 18 වැනි බදාදා - 2020.11.18

*2202/16 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி*

### *உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்*

***2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) ஆம் பிரிவின் கீழ் ருவன்வெல்ல பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டமையின் காரணமாக ருவன்வெல்ல பிரதேச சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) ஆம் பிரிவின் கீழ், தவிசாளர் பதவி வகித்த லொக்குஹெலபிட்டியகே சுதத் மஞ்சுல என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளர் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும் ருவன்வெல்ல பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான தவிசாளர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நாரங்கொட ராலலாகே மஞ்சுல பிரியஷாந்த நவரத்ன என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*ருவன்வெல்ல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சஜித் வசந்த வெல்கம ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66ஆ(2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு நாரங்கொட ராலலாகே மஞ்சுல பிரியஷாந்த நவரத்ன என்பவர் ருவன்வெல்ல பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**சஜித் வசந்த வெல்கம,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*கேகாலை,*
*2020, நவெம்பர் 18.*


1A - G 33218 — 31 (2020/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*